சேப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திருமதி. தெய்வானை தீனதயாளன்

ந.க.எண். ஆ1/02/2023 நாள். 25.08.2023.

பொருள் மனைப்பிரிவு – ஊராட்சி ஒன்றியம் – சேப்பாக்கம் ஊராட்சி – சர்வே எண்.436/4பி ஆகியவற்றில் 1.18 ஏக்கர் (4775.24 ச.மீ) பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் – வழங்கி உத்திரவிடல் – தொடர்பு.

பார்வை

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம், ந.க.எண்.58/2023 /க.மா. நாள்.04.07.2023.
2. திரு. பாலகிருஷ்ணன் த/பெ. பெருமாள் அவர்களின் விண்ணப்பம் நாள்.
3. சேப்பாக்கம் ஊராட்சியின் தீர்மானம் எண். 56 நாள்.25.08.2023.

உத்தரவு

பார்வை 1-ல் காணும் கடிதத்தின் படி நல்லூர் ஊராட்சி ஒன்றியம் சேப்பாக்கம் ஊராட்சியின் சர்வே எண்.436/4பி ஆகியவற்றில் 1.18 ஏக்கர் (4775.29 ச.மீ) பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைபிரிவுக்கு அரசாணை எண்.79-ன்படி வீட்டு வசதி மற்றும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி துறை நாள்.04.05.2017 விதி எண். 7(9)(ii) -ன்படி கொள்கை அளவிளான ஒப்புதல் வழங்கப்பட்டு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு கீழ்காணும் விவரப்படி தெரிவிக்கப்படுகிறது.

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், சேப்பாக்கம் ஊராட்சி மேதகு தமிழக ஆளுநருக்காக அவரின் பிரதிநிதி என்ற முறையில் உதவி இயக்குநகர், நகர் ஊரமைப்பு கடலூர் அவர்களின் பெயரில் மனைப்பிரிவில் உள்ள பொதுப்பாதை மற்றும் பொது இடத்தினை வேப்பூர் சார்பதிவளாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் பதிவு செய்து ஆவண எண்.1635/23, நாள்.08.06.2023 மூலம் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பொதுப்பாதை ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டு ஆவணம் பெறப்பட்டுள்ளது.

* சேப்பாக்கம் ஊராட்சியின் சர்வே எண்.436/4பி ஆகியவற்றில் 1.18 ஏக்கர் (4775.29 ச.மீ) கொண்டது.
* கூறாய்வு கட்டணம் ரூ.28,000/- (ரூபாய் இருபத்தி எட்டு ஆயிரம்) செலுத்திய நாள்.14.08.2023 மனுதாரரால் சேப்பாக்கம் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

...2,-

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண.58/2023/க.மா. நாள். 04.07.2023-ன்படி குறிப்பிட்ட பொதுச்சாலைகள் ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடத்தினை தவிர்த்து சேப்பாக்கம் ஊராட்சி எல்லைக்குட்பட்ட இடத்தினை மட்டும் விற்பனை செய்ய பார்வை 3-ல் காணும் சேப்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் வரைபடத்தின் படி ஒதுக்கப்பட்டுள்ள 28 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்.

1. அரசானை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள். 13.10.17-ல் விதி எண். 7(g)(ii) -ன் படி மனைப்பிரிவில் வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) -இடங்கள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானதாக இல்லை என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

3. சாலைகள் தார்சாலையாக இருக்க வேண்டும், வடிகால் வாய்க்கால் வசதி செய்து தர வேண்டு:, தெருவிளக்கு வசதி செய்து தரவேண்டும். தவரும் பட்சத்தில் இந்த இறுதி ஒப்புதல் ஏதும் முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும்.

ஊர்ாட்சி மன்ற தலைவர்,
சேப்பாக்கம் ஊராட்சி.

தலைவர்
ஊராட்சி மன்றம்
சேப்பாக்கம் ஊராட்சி.

பெறுதல்
பாலகிருஷ்ணன், த/பெ. பெருமாள்,
நெ.6. பெஸ்தாபா தெரு,
சோளிங்கர் நகர்,
வேலூர்.

நகல்.

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் மாவட்டம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) ஊராட்சி ஒன்றியம், நல்லூர்
3. சார் பதிவாளர் அலுவலகம், வேப்பூர்.